DUPLICATE

பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதிகூ (1889) ஆவணிமீ உஉஎ ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1 க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,, ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி: ,, ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
,, அரைக்கலம் ரூ. 5 00
,, காற்கலம் ரூ. 3 15
,, ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ஈடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி ஆ ஐப்பசிமீ ௬௨ (கஉஎஉ அக்டோபர் உஉ) திங்கட்கிழமை { இலக்கம்—ஈ0.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்;
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிராயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.
(Standard Tiles.)

இவை வேறேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாரால் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டில் வெப்பத்திற்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையோடுகளினுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

இழந்துபோன பலத்தை
ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
புஷ்டிக்கு கைகண்ட மருந்து.
இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிசுத்த பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும். சொத்து நோய், அவமிருத்து தோஷம், மேசியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்கு ரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. சுருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.
சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.
இனும்! இனும்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும். இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புரித்தவர்க ளறிவார்கள். இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்யும் அறிந்துமிராங்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய சேவகத்தக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 108 நரம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேகாங்கக முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டீர்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம் டப்பி 1-க்கு ரூ. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1-க்கு ரூ. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினங் மலாய் எஸ்டேட்களுக்கு மருந்துக்கிரையமும் தபால்செலவுக்காக ரூ 2உ முன்னதாக மணிஆடர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரம் கிழக்கண்ட விலாசத்தினால் தெரிந்துகொள்ளவும்.

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னாங்காடு ஜில்லா.
(Y. 20)

தீபாவளி நெருங்கிவிட்டது.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!
விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சாணுக்களும், நயம் 120 கெ. 100 நெ. 80 நெ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிங்கக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் நேர்ட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.
} கா. கோ. அ. வெ. கு ஒபுளிசெட்டியார் & Co,.
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.
(Q. 44)

காகிதாடாசேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லிகைப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

சருவஞானோத்தர ஆகமம்
ஞானபாதம் தமிழ் மூலமும்
முத்திரத்ந விருத்தியும்.

இது ஸ்ரீசண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவ சித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்படும்.

☞ பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
(H. 20) தேவகோட்டை.

Telegrams: "APPANNA', BANGALORE CITY'

கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,
பெங்களூர் நகர்,
(இந்தியா).

பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

	ரூ.அ.பை.
பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை	0-12-0
முதல் ரூபா 2-0-0 வரை.	
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1 8-0
முதல் ரூபா 4-0 0 வரை.	
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1 8-0
முதல் ரூபா 3-0-0 வரை.	
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	5-0-0
முதல் ரூபா 7-0-0 வரை.	
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	5 0 0
முதல் ரூபா 12 0-0 வரை.	
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1-8-0
முதல் ரூபா 20-0-0 வரை.	
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ.	0-4-0
முதல் ரூபா 5-0-0 வரை.	
புனுகு தோலா 1க்கு விலை ரூபா	10-0 0
முதல் ரூபா 12-0-0 வரை.	
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா	2 0 0
முதல் ரூபா 3-0-0 வரை.	

கூந்தல் வளருந் தைலம்.

டில்மோரலினி ஹேர் ஆயில்புட்டி 1க்கு 0-12 0
டஜன் 1க்கு 8 0 0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0 12-0.
டஜன் 1க்கு 8 0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.

ஓட்டோ வாஹனை ஸெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டில்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6 0-0

சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(Y. 16) (INDIA).

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது
புஷ்டிக்கு கைகண்ட
ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நாம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் தீர்வீய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வாராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. சுருப்பண பிள்ளை,
(Q 41.) வைத்தியசாலை, பழனி, S. I.

இந்துசாதனம்

வாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி ஞு
ஐப்பசிமீ கூ திங்கட்கிழமை.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பரிசளிப்புக் கொண்டாட்டம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்புக் கொண்டாட்ட வரலாற்றை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டுள்ளேம். இந்தச் சந்தர்ப்பத்தில் இக் கல்லூரியைப் பற்றி எமது அபிப்பிராயத்தைக் கூறுவது மிகை யாகாது. கொழும்பிலே ஆநந்தக்கல்லூரி சிங்களமக்களால் வைத்து நடத்தப்பட்டு வருதல் போலவே யாழ்ப்பாணத்திலும் முதன்முதல் இக் கல்லூரி இங்குள்ள தமிழ் மக்களால் ஸ்தாபித்து நடத்தப் பெற்றுவரலாயிற்று. இங்குள்ள ஏனைய இந்துக்கல்லூரிகளெல்லாம் பிற்காலத்தன. ஆநந்தக் கல்லூரி காலந்தோறும் நன்கு விருத்தியடைந்து வருகின்றதென்பதை, வருடந்தோறும் ஆங்கு நடக்கும் பரிசளிப்புக் கூட்டத்தின் அறிக்கைப் பத்திரவாயிலாகவும், கேரில் அக்கல்லூரியைத் தரிசித்து மீண்ட நம்மவர்வாயிலாகவும், அங்கு ஆசிரியர்களாக இருந்த இருக்கின்ற தமிழ் மக்கள் சிலர் வாயிலாகவும், இங்கிருந்து அக்கல்லூரியிற் கல்விபயின்ற தமிழ் மாணவர் சிலர் வாயிலாகவும், பிற வாயிலாகவும் அறியலானேம். ஆநந்தக் கல்லூரி அங்ஙனம் காலந்தோறும் விருத்தியடைந்து வருவதன் இரகசியம் யாதென ஊன்றிச் சிந்திக்குமிடத்து அக்கல்லூரி அதிகாரிகளும் ஆசிரியர்களும் ஏனைய சிங்கள சாதியத்தாரும் அதன் விருத்தியின்மீதே சதா கண்ணுங் கருத்துமாயிருத்தலே யென்பது இனிது புலனாகும். அக்கல்லூரியை அவர் விருத்தி செய்யும் விஷயத்திற் செய்யாத முயற்சியில்லை யெனலாம். ஏழை செல்வர் என்றபேதமின்றி எவரும் காலத்திற்குக்காலம் தங்களால் இயன்ற திரவிய சகாயத்தை அக்கல்லூரிக்கு உதவி ஆவசியகம் வேண்டிய கட்டிடங்களை நிறைவேறச்செய்து மிக்க அபிமானத்துடன் தங்கள் சிறுவரை அக்கல்லூரிக்கே அனுப்பிவருகின்றார்கள். கல்வியூட்டும் விஷயத்தில் மாத்திரமமையாது, உடை நடை பாவனை முதலிய சகல விஷயங்களிலும் தங்கள் சாதிக்குரியனவற்றையே கைக்கொள்ள வேண்டுமென்ற அபிமானம் அங்குள்ள ஆசிரியர் மாணாக்கர்களனனுமிருபாலார்க்குமிடையே காணப்படுகின்றது.

இந்த ஆநந்தக் கல்லூரியைத் திருஷ்டாந்தமாகக்கொண்டு தமிழ் மக்களாகிய நாங்களும் எங்கள் இந்துக் கல்லூரியை நடத்திவந்தால் யாதும் இழுக்கில்லையாம். இக்கல்லூரி யதிகார சபையாரும் ஆசிரியர்களும் ஊரவர்களும் இதனைத் தமது சாதியக் கல்லூரியாக அபிமானித்து நடத்துதல் வேண்டும். கல்லூரி அதிகாரிகள் ஊரவர்களின் பிரதிநிதிகளாகவிருந்து இக் கல்லூரியின் பொறுப்பை வகித்து நடத்தி வருகின்றோம் எனத் தாங்கள் தங்கள் மனத்திற் கொள்ள வேண்டும். இதனது ஆசிரியர்களாயுள்ளவர்கள் தாம் வேதனத்தின் பொருட்டு மாத்திரம் கல்வி பயிற்றி வருவதாகவெண்ண வொண்ணாது. தமிழ்ச் சைவ நன்மக்களென்ற உரிமை பற்றி, சைவசமய ஸ்தாபனமாகிய இக் கல்லூரியிலே, தாமுந் தமது கடமையைச் செய்துவருவதாக எண்ணிக்கொள்ளுதல் வேண்டும். சைவ சமயத்தாசிரியர்களாகிய தாங்கள் இப்படிப்பட்ட ஒரு சைவக் கல்லூரியிற் கடமை பார்க்க வாய்த்ததே என்று இவ்வாசிரியர் மகிழ்ச்சி யடைதல் வேண்டும். அதிகார சபையாரும் ஆசிரியர்களைக் கூலிக்குக் கல்விபயிற்ற வந்தவர்களாகவும் தங்கள் கீழ்க் கடமை பார்ப்பவர்களாகவும் எண்ணவொண்ணாது. இங்குள்ள அந்நிய மதத்தைச் சார்ந்த ஆசிரியர்களும் இது தமக்கு அன்னமளிக்கும் ஸ்தாபன மென்னும் நன்மை பற்றியும் மார்க்க பேதமிருப்பினும் தாமும் தமிழகத்தைச் சார்ந்தவரே யென்பது பற்றியும் கல்லூரிமீது பேரபிமானம் பாராட்டி உழைத்தல்வேண்டும்.

இக்கல்லூரியின்வயசிற்கு இதனுடைய வளர்ச்சி போதியதன்று. இதற்கென்று ஒரு பெரு நிதி சேமித்து வைத்தல்வேண்டும். இது எக்காலத்திலும் அரசினர் சகாயத்தை நம்பியிருக்கவொண்ணாது. இப்பொழுதிருக்கும் பிள்ளைகளினும்பார்க்கக் கூடிய தொகைப் பிள்ளைகளை, சகாதார ஒழுங்கின்படி வைத்து நடத்துதற்கான விடுதிச்சாலை இக்கல்லூரிக்கு ஆவசியகம் வேண்டும். இவற்றிற்கெல்லாம் இன்றியமையாதனவாயுள்ள இடம் பொருள் ஏவல் என்னும் இம்மூன்றுமாம். யாழ்ப்பாணத்திலுள்ள எவரும், உத்தியோகத்தராக இங்கிருந்து பிறவூர்களிற் சென்று வசிப்பவர்களுமாகிய தமிழ் நன்மக்களெல்லாம் இக்கல்லூரி விடுதிச்சாலை முதலிய கட்டிடச் செலவின் பொருட்டும், ஆதார நிதியின் பொருட்டும் இயன்ற பொருள் உதவுதல்வேண்டும். அதிகார சபையார் தங்களுட் சிலரைத் தெரிந்து நிதி சேர்க்கும் பொருட்டு இடங்கடோறும் அனுப்புதல்வேண்டும். அதிகாரசபையங்கத்தவர் ஒவ்வொருவரும் ஒரு பெருந்தொகை நிதி ஓரேமுறையிலேனும்மாசாந்தோறுமேனும் உதவிவரல்வேண்டும். பிறரிடத்திலேபணம் வாங்கச் செல்லுதற்கு முன்னர் இவர்கள் தாமும் ஏதாயினும் உதவிச் சென்றாலே பொருளுதவும் பிறருக்கு இவர்கள்மீது அதிக நம்பிக்கை பிறக்கும். இனி இக் கல்லூரி ஆசிரியர்களாயுள்ளவர்களும் கல்லூரியின்நோக்கங்கள் நிறைவேறும்வரைக்கும், அவரவர் வேதனத்திற்குத் தக்கபடி தங்கள் வேதனத்தில் அற்பமாகவேனும் மாசந்தோறும் இக்கல்லூரிக்கு உதவிவருதல்வேண்டும். இக்கல்லூரி 'ஸ்கவுற்'மாணவரென்றிருப்பவர் நெடியதடியுங்கொண்டு தெருவழியே சும்மா திரியாது, ஊருட் சென்று கொடிகளைவிற்றுப் பணம்பெற்று கல்லூரிக்கு உதவும்படி, கல்லூரி அதிகாரிகள் அப்பிள்ளைகளுக்கு அதிகாரங் கொடுத்தல் வேண்டும். முன்னே இக் கல்லூரிக் கட்டிட வேலை நடைபெற்றபோது அக்காலத்திருந்த அபிமானிகள் தம் விடாமுயற்சியால் வீடுகள்தோறுஞ் சென்று தேங்காய் முதலியன சேர்த்துப் பொருளீட்டியும் இப்பாரிய கட்டிடத்தை நிறைவேற்றினர். ஆதலால் இப்பொழுது கொடிவிற்றுப் பொருளீட்டுவதனால் வரும் கௌரவக் குறைவு யாதுமில்லையாம். பலதுள்ளி பெருவெள்ள மென்பர். யாம் மேலே சொன்ன பிரகாரம் கல்லூரி அதிகாரிகள் ஆசிரியர்கள் அபிமானிகள் என்னும் முத்திறத்தாரும் தமக்குள் யாதும் விபரீத விளக்கமின்றி ஒத்துழைத்துவருவரேல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விரைவில் இங்குள்ள கல்லூரிகளெல்லாவற்றிற்கும் சிரஸ்தானம் வகித்துவரும் என்பது திண்ணம்.

நிற்க, இன்னும் யாம் கூறி முடிப்பதொன்றுண்டு. கௌரவஸ்ரீ துரைசுவாமியவர்கள் அந்தச்சந்தர்ப்பத்திற் சொன்ன பிரகாரம், பரிசளிப்புக் கூட்டத்தில் மாணவர் தமிழ்ப் பாஷையில் மநநப் பிரசங்கம் முதலியன செய்யா தொழிந்தமை ஒரு பெருங் குறையாகும். எங்ஙனமெனின், சுவய பாஷையை விருத்தி செய்ய வேண்டுமென்ற அபேட்சை எச்சாதியாரிடத்தும் உண்டாயிருக்கும் இக்காலத்தில் தமிழ்மக்களால் நிர்வகித்து நடத்தப்படும் இக்கல்லூரியிலே தமிழ்ப் பாஷாபிவிருத்தியை எவரும் எதிர்பார்த்திருப்பர். தமிழ்ப்பாஷையில் மநநப்பிரசங்கம் முதலியன மாணவர் செய்தலைக் கேட்டல் தமிழபிமானிகட்கெல்லாம் பேரானந்தத்தை விளைக்கும். அதுவுமன்றி, பரிசளிப்புக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட பெற்றோருட் பெரும்பாலார், ஆங்கிலமறியாதவர், தங்கள் சிறுவர்கள் ஆங்கிலத்திலே மநநப்பிரசங்கஞ் செய்யும்போது, ஆங்கிலமறியாத அப்பெற்றோருக்கு விளங்காதொழிய, அவர்கள் ஆங்கிலமறிந்த மற்றையோர், மாணவர் மநநப் பிரசங்கங்களைக்கேட்டு மகிழும் போதும் சிரிக்கும்போதும் அவர்கள் செய்வதைப் பார்த்து இவர்களும் மகிழ்ச்சி காட்டிச் சிரித்தமையையும் கரகோஷஞ் செய்தமையையும் யாம் பாரத்துள்ளோம். ஆதலால் ஆங்கிலமறியாத பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் திறமையை உள்ளபடியுணர்ந்து மெச்சும்படி செந்தமிழிலும் மநநப் பிரசங்கங்கள் செய்யும்படி மாணவர்கட்குப் பயிற்றிவைத்தல் வேண்டும். இதனால் ஆங்கிலபாஷை மநநப்பிரசங்கம் அநாவசியமென்பது சிறிதேனும் பெறப்படாது. அடுத்தமுறை மேற்படி கல்லூரி ஆசிரியர்கள் அங்ஙனஞ் செய்வார்களாக.

கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமோ?

யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் காரியதரிசியாகிய பிரமஸ்ரீ தி. சதாசிவஐயரவர்கள் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

இச்சங்கத்தார் தமிழநற்க விரும்பும் வித்தியார்த்திகளுக்கு உதவியாக ஒரு தமிழ் இலக்கணஇலக்கிய வகுப்புகடத்த நிச்சயித்து, பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்தார்கள். அவ்வகுப்பிற் சேர்ந்து படிக்க விருப்பமுள்ளவர்களாக ஆறுபேர் மாத்திரம் எழுதி அறிவித்துள்ளனர். ஒரு வகுப்பு நடத்துவதற்கு இத்தொகைபோதியதன்று; குறைந்தபக்ஷம் பதினைந்து பேராதல் சேர்ந்தால் அவ்வகுப்பினைத் தொடங்கி நடத்துதல் கூடும். சேர்ந்து படிக்க விருப்பமுள்ளவர் இன்னும் வேறு எவரேனும் இருப்பின் அவர் தாமதமின்றி உடனே எழுதிக் காரியதரிசிக்கு அறிவித்தல்வேண்டும்.

நமது செந்தமிழ்ப் பாஷையைக் கற்க வேண்டும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற கிளர்ச்சி சிலகாலமாக எம்மவர்களிடத்து உண்டானமை பற்றிப்போலும், இவ்விஷயமாகப் பலர் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். ஆனால் செயலளவில் அத்துணைக் கிளர்ச்சியிருப்பதாகக் காணேம். இலங்கையிலே சிங்கள சாதியார் இது போன்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்து, பாலி சிங்களம் சம்ஸ்கிருதம் என்னும் பாஷைகளை நன்கு விருத்திசெய்து வருகின்றார்கள். யாழ்ப்பாணத்திலே சுவய பாஷை அபிமானம் இன்னமுந் தழைத்திலது போலும். இந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம், பிரமஸ்ரீ சதாசிவ ஐயரவர்கள் போன்ற சில பாஷாபிமானிகளின் இடையறா முயற்சியினால் அரசினர் துணையும் பெற்று ஒருவாறு யாழ்ப்பாணத்திலே ஸ்தாபிக்கப்பட்டது, இச் சங்கத்தின் முதற் பரீக்ஷை சென்ற ஏப்பிரல் மாசம் நடைபெற்றது. இச்சங்கம் காலகதியில் விருத்தியாகி, நமது செந்தமிழ்ப் பாஷையையும் சம்ஸ்கிருதத்தையும் அபிவிருத்தி செய்தற்குச் சிறந்த துணையாகுமென்பதே எமது அபிப்பிராயம். இங்குள்ள தமிழ் மக்கள் சிற்சிலர் கூடிக் கூடி வெவ்வேறான தமிழ்ச் சங்கங்களையும் சபைகளையும் ஆரம்பித்துப் பின்னர்க் கைகழுவிவிடுவதைக் காட்டிலும் எல்லோருஞ் சேர்ந்து அரசினரின் சகாயத்துடன் இச்சங்கத்தை நன்கு நடத்திவருவது நன்றாம். யாழ்ப்பாணத்திலேயுள்ள பல ஆங்கில தமிழ் வித்தியாசாலைகளிலும் கல்லூரிகளிலும் இச் சங்கப் பரீக்ஷைக்குரிய வகுப்புகளைவைத்துப் படிப்பித்துச் சங்கப் பரீக்ஷைக்கு மாணவர்களை அனுப்பி வருதல் சிறந்த செயலாகும். மூன்று வகுப்புகளையும் பள்ளிக்கூடங்களில் வைத்து நடத்துவதற்கு இப்பொழுது கூத்தியப்படாவிட்டாலும், வித்தியாசாலை அதிகாரிகளும் ஆசிரியர்களும் பிரவேச பண்டித வகுப்பு, பால பண்டித வகுப்பு என்னும் இருவகுப்புகளையேனும் வைத்துப் படிப்பித்தல் நன்றாகும். குறித்த அதிகாரிகளும் ஆசிரியர்களும் முறையே உதவி நன்கொடைப் பணத்தையும் வேதனத்தையும் மாத்திரம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கவொண்ணாது. நமது அரிய செந்தப் பாஷையின் பொருட்டும் பாடுபடுதல் வேண்டும். ஒரு தமிழ் வகுப்பிற் சேர்ந்து படித்தற்கு ஆறு சிறுவர் மாத்திரம் முற்பட்டு நிற்பது வெட்கம், வெட்கம், பெரும்வெட்கம்! பண்டித, பாலபண்டித வகுப்புகளிற் சேர விரும்பும் பிள்ளைகளும் தமிழில் நொத்தாரிசு வேலைபார்க்கவிரும்பும் பிரக்கிராசிமாரும் காலதாசமின்றிப் பொதுவான ஒருஇடத்தில் வகுப்பாகச் சேர்ந்து படித்தற்கு முயற்சி செய்தல்வேண்டும். கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமோ!

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்புக் கொண்டாட்டம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்புக் கொண்டாட்டம் இந்த அக்டோபர் மாசம் கூ-ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை ஐந்தரை மணி தொடக்கம் மேற்படி கல்லூரிக் கீழ் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கல்லூரி அதிகார சபையின் அக்கிராசனராகவுள்ள ஸேர் அம்பலவாணர் கனகசபையவர்களே அச் சமயத்தில் சபைத் தலைவராகவிருந்து மாணாக்கருக்குப் பரிசுகள் வழங்கினர். யாழ்ப்பாணத்துள்ள ஏனைய கல்லூரி ஆசிரியர்களும், இந்துக்கல்லூரி மாணவர்களின் பெற்றோர் சுற்றத்தவர் பலரும், அரசாங்க உத்தியோகத்தர்களும், நியாயதுரந்தரர்களும், அபிமானிகளும், இந்துக் கல்லூரி அதிகாரசபை அங்கத்தவர்களும், ஆசிரியர் மாணாக்கர்களும் அச்சமயத்தில் வந்து நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த மேற்படி மண்டபத்திற் குழுமினர். கல்லூரிப் பிரதம ஆசிரியராகிய மிஸ்தர் நெவின்ஸ் செல்வத்துரை B A, J. P, M. B. E. சென்ற கூ௧௨-ம் ஆண்டின் கல்லூரி அறிக்கைப் பத்திரத்தை வாசித்தனர். அதன்பின்னர், சிலமாணவர் கேட்டோர்க்குப் பத்திரசங் கிளரும் வண்ணம் தேவாரமோதினர். சில மாணவர் ஆங்கிலத்தில் மநநப் பிரசங்கங்கள் செய்தனர். கல்லூரி உயர்தர வகுப்பு ஆசிரியர்களுளொருவராகிய ஸ்ரீ மு. சபாரத்தினசிங்கம் B A. அவர்களால் நன்கு பயிற்றப்பட்ட, ''ஸ்கவுற்ஸ்'' எனப்படும் சனசமூக ஊழிய மாணவர் சபை மேடையிற் சில விளையாட்டு விளையாடினர். கல்வியில் ஒவ்வொரு துறையிலும் திறமையுடன் சித்தியடைந்த மாணவருக்கும், விளையாட்டிற் றிறமையுடைய மாணவர்சிலருக்கும், ஒழுக்கமுள்ள மாணவகனுக்கும், கிரமமாகப் பள்ளிக்கூடத்துக்கு வந்த மாணாக்கனுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. சமயபாடப் பரிசுகளும், பொதுப்பட மற்றும் பாடங்களில் அதிக திறமை காட்டிய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட பரிசுகளிற் பெரும் பகுதியும் இக்கல்லூரித் தாபகர்களுள் ஒருவராயும் அதன் தனுதிகாரியாயுமிருந்து காலஞ்சென்றுபோன ம-ா-ா-ஸ்ரீ சித. மு. பசுபதிச்செட்டியாரவர்கள், சைவபரிபாலனசபை இந்து சாதனம் இந்துக்கல்லூரி ஆகிய இவற்றின் ஸ்தாபகர்களாயும் போஷகர்களாயுமிருந்த இருக்கின்ற பிரபுக்கள் பெயரால் வருஷந்தோறும் பரிசளிக்கும்படி ஏற்படுத்திய நிதியிலிருந்து கொடுக்கப்பட்டன.

சபைத் தலைவராகிய ஸேர் கனகசபையவர்கள், இந்துக் கல்லூரியின் வரலாற்றையும் இக்கல்லூரியின் பொருட்டு ஆரம்பந் தொடக்கம் இற்றை வரையில் உழைத்து வந்த வருகின்ற அபிமானிகளின் பேரபிமானத்தையும் பற்றித் தொகுத்துக் கூறி, இக்கல்லூரிக் கட்டிடத்தை விருத்தி செய்வதற்கு அதிக பணம் வேண்டியிருப்பதினால், வித்தியாபிமானம் ஆண்ட தனவந்தர்களாயுள்ளவர்கள் பொருளுதவி செய்து இந்த வித்தியாஸ்தாபனத்தைநன்னிலைப்படுத்தல்வேண்டுமென்று அதிக நேரம் பேசிமுடித்தனர். அதன் பின்னர் இந்துக்கல்லூரி அதிகாரசபை நிருவாகசபை என்னுமிரு சபைகளிலும் அங்கத்தவராகவிருக்கும் கௌரவஸ்ரீ வை. துரைசுவாமியவர்களெழுந்து கல்லூரிக்குந் தமக்குமுள்ள தொடர்பைச் சபையாருக்கு விளக்கி, பிள்ளைகளின் மநநப் பிரசங்கங்களையும் தேவார பாராயணத்தையும் மெச்சி அவர்களை ஊக்கமுறச்செய்யும் சில வாக்கியங்கள் சொல்லினர். சொல்லும்போது, தமிழிலே பிள்ளைகள் மநநப் பிரசங்கஞ் செய்யாதுவிடுத்தமை துக்கப்படத்தக்கதென்றும், தமிழ்ப் பாஷையையே எக்காலத்தும் பெரிதும் விருத்திசெய்ய வேண்டுமென்றும், இனிமேல் ஆங்கிலங் கற்றுவிட்டு இப்பிள்ளைகள் பிழைப்பிற்கு என்ன செய்யப் போகின்றார்களென்றும் பரிந்து கூறினர். மேலும் ஸ்ரீ வை. துரைசுவாமியவர்கள் சபைத் தலைவர் கூறியபடி இக்கல்லூரியை விருத்தி செய்வதற்கு இருக்கும் இடையூறு பொருளின்மை யென்றும், ஆதலாற் பொருளுதவும் பொருட்டு இங்குள்ள செல்வர்கள் முற்பட்டு நிற்றல்வேண்டுமென்றும் பேசிமுடித்தனர். அதன்பின்னர் இங்குள்ள தலைமை வித்தியாதரிசியாகிய மிஸ்டர் H. S. பெரிறா M. A. எழுந்து பேசும்போது, தமிழ்மக்களால் ஆரம்பித்து தமிழ்மக்களாற் பொருள் செலவிட்டுத் தமிழ் மக்களின் முயற்சியால் இக்கல்லூரி நன்கு நடைபெற்று வருதல் தமிழ் மக்களாயுள்ளாரெல்லாருக்கும் பெருமிதத்தைத் தருவதாகுமெனக் கூறி, மாணவர்க்குச் சமயக்கல்வி யூட்டும் விஷயத்திலே அரசினருக்கும் கத்தோலிக்க சமயத்தவர்கட்கு மிடையேயுள்ள அபிப்பிராயபேதத்தைப்பற்றியுஞ் சில கூறினர். அதன்பின் பரமேஸ்வரக் கல்லூரிப் பிரதமாசிரியராகிய மிஸ்டர் F. கோர்டன் பீயஸ் M. A. அவர்கள், தாம் யாழ்ப்பாணத்திற்குப் புதியவராதலினால் இங்குள்ள பழக்க வழக்கங்கள் தமக்குப் புதியனவென்றும் ஆனதுபற்றி இச்சமயத்திலே தாம் அதிகம்பேசக்கூடியநிலைமையிலில்லையென்றுஞ் சொல்லி, கிழைத்தேச வாழ்க்கைக்கும் பழக்கவழக்கங்களுக்கும் இயைந்த கல்வியையே கற்றல்வேண்டுமெனவும், மேலைத்தேச உடை நடை பாவனைகளை இவர்கள் பின்பற்றிக் கெட்டுப்போகாமல், கிழைத்தேச உடைநடை பாவனைகளையே அனுசரித்து, பொருட் செலவுகுறைந்த கீழைத்தேச வாழ்க்கையை அனுசரித்தல்வேண்டுமென்றும் பேசினர். இவருடைய பேச்சைச் சபையோர் மிகவும்மெச்சினர். அதன்பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் பிரதிநிதியாக வந்த பிறற்றர் ஸ்ரீ சி. கந்தையா அவர்கள் சிலபேசினர். நற்றில் மேற்படி கல்லூரி மானேஜராகிய ஸ்ரீ. அ. சபாபதியவர்கள் சபையாருக்கு வந்தனங் கூறினர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

சமாசாரம்

காலநிலை:—சென்ற வெள்ளிக்கிழமை இங்கே பெருமழை பெய்தது. அன்று தொடக்கம் இடையிடையே மழை பெய்துகொண்டுவருகின்றது.

நிரபராதியெனக் காணப்பட்டான்:— சில வாரங்கட்கு முன்னர், கொக்குவிலில் ஒரு குதிரைவண்டி ஒரு கிழவனை கொந்தித்துக் கொன்ற சமாசாரத்தை இப்பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். இவ்விஷயமாக வண்டிக்காரன் மீது தொடர்ந்த வழக்கில் அவன் நிரபராதியெனக் காணப்பட்டான்.

மோட்டாரதச்சாரதிக்கு நேர்ந்தவிபத்து:— சில தினங்கட்கு முன்னர் சங்கரத்தை யென்னுங் கிராமத்துள்ள தெருமார்க்கத்தில் பெரிறு வென்னுமொரு மோட்டாரதச் சாரதி தனது ரதத்திற்கு எண்ணெய்யூற்றும்போது சில துளிகள் அயலேயிருந்த உலாந்தர் மீதிற்படவே உடனே தீப்பிடித்து சாரதியின் உடம்பு எரிந்து போய் விட்டது. சாரதி சிலநாட்சென்றபின் மாளிப்பாய்வைத்திய சாலையில் உயிர்நீங்கினான்.

யாழ்ப்பாணம்சாஸ்வதிவிலாசசபை:—இச்சபையார் யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள 'திஞ்வே' மண்டபத்தில் வருகிற வெள்ளிக்கிழமை யிரவு அரிச்சந்திரநாடகம் மயானகாண்டத்தை நாடகமாக நடத்த நிச்சயித்திருக்கின்றனர். இம்மயானகாண்டம், இவ்வருஷத்திய ஜூனியர்ப்பரீக்ஷைக்குத் தமிழ்ப் பாடமாக, கேம்பிறிஜ்சர்வலைசங்கத்தாரால் விதிக்கப்பட்டிருத்தலால், ஜூனியர்ப்பரீட்சைக்குச் செல்லவிருக்கும் மாணவர்கள், மேற்படி சபையார் நடத்தும் நாடகத்தைச் சென்று பார்த்தல் நன்றும்.

சோரமாய்ச் சாராயம் விற்றல்:—பன்னாகத்தில் வசிக்கும் தம்பையா வென்னுமொருவன் சோரமாய்ச் சாராயம் விற்றுவந்தமையையறிந்து ஊர்காவற்றுறை மதுப்பரிசோதகர் பொலிசுடன் அவனைப்பிடிக்கச் சென்றபோது மதுப்பரிசோதகரும் பொலிசும் தாக்கப்பட்டனர். பின்னர் மதுப்பரிசோதகர் தலைமைத்தியோகத்தர் சிலபொலிசுடன் சென்று தம்பையாவை அரெஸ்படுத்தி அவன்மீது வழக்குத் தொடர்ந்தனர். எதிரி யாழ்ப்பாணம் பொலிஸ்கோர்ட்டில் 200 ரூபா அபராதம், கட்டத்தவறினால் 6 வாரச் சிறை விதிக்கப்பட்டான்.

புதிய வித்தியாதரிசிகள்:—கொழும்புச் சர்வகலாசங்கக் கல்லூரி ஆசிரியருளொருவராக வேலைபார்த்துவந்த ஸ்ரீ K. S. அருள்நந்தியவர்கள் சான்றிதழ்பகுதி உதவி வித்தியாதரிசியாகவும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியருளொருவராகிய ஸ்ரீ க. வே. கதிரவேலு அவர்கள் தமிழ் உபவித்தியாதரிசியாகவும் நியமனம் பெற்றுள்ளனர். ஸ்ரீ அருள்நந்தியவர்கள் (B Sc.,) பி. எஸ். சி. பரீட்சையிற் சித்தியடைந்துள்ளவர். அதிக திறமை வாய்ந்தவர். ஸ்ரீ கதிரவேலு அவர்கள், உரும்பராய் இந்து ஆங்கில வித்தியாசாலைத் தமிழ்ப்போதகாசிரியரும் தமிழ் வித்துவானுமாகிய ஸ்ரீ க. வேற்பிள்ளையவர்களின் புதல்வர். இவ்விருவருடைய நியமனமுந் தக்கனவாம்.

வேறியலின் தடுமாற்றம்:—இரத்தினபுரிப் பட்டினபரிபாலன சங்கத்தின்கீழ் வேலைசெய்துவந்த முத்துச்சாமி என்னுமொருவன் சென்றபின்மூன்றுநாளிகதி சம்பளங்கிடைத்தலும் தவறணைசென்று நல்ல தாராளமாய்க் குடித்து வெறித்து மதிமயங்கித் தான் போகவேண்டிய இடந்தெரியாதுபோய் முப்பது அடி ஆழமான கிணற்றுள்ளே தொப்பென விழுந்தான். தண்ணீர் அவ்வளவு ஆழமாய் இல்லாததால் ஒருவாறு உயிர் தப்பித்துக்கொண்டான். விழுந்த விழுகையிலே வெறிமுரிய அதன்மேலேதான் கிணறொன்றுள் தான் இருப்பதைக்கண்டு சத்தமிட்டான்.

சிறியதாயின் கொடுமை:—மாத்தளைக்குச் சமீபமாய்ப்பால்தேவியாஎன்னுமிடத்திலேஆசையும்மா என்னும் ஒருமகமதிய பெண் தனது புருஷனின் முதற்றாரப் புத்திரியான அலியும்மா என்னும் 12 வயதுச் சிறுமியைக் கொடுமையாய் நடத்திப் படுத்தாதபடிப்படுத்தி வந்தாள். கடைசியாய் ஒருநாள் அச்சிறுமி நேரத்துடன் சமையல்வேலைகளை முடியாததால் எரிப்பேசி அவளுடன் சண்டையிட்டு அவளை யடித்தாள். சிறுமியோ ஆக்கினை தாங்கவியலாது தண்ணீர்ச்சுனப் போகிறவளைப்போலச் சென்று கிணற்றுள் குதித்து உயிரைமாய்த்துக் கொண்டாளாம். ஐயோ பாவம்!

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

பாம்புக்கடி:—சலாபப் பகுதியிலே நெடுங்காலமாகக் கடுங்கோடையாயிருப்பதாலே பாம்புகள் எல்லாம் தண்ணீர் குடிப்பதற்காய் ஆங்காங்கு ஊடாடித் திரிகின்றனவாம். அப்படித் திரிகின்றமையாலே பலர் அவற்றாலே தீண்டப்பட்டிருக்கிறார்கள். அங்கு கஞ்சர்குளியா என்னுமிடத்தில் தவசி என்னும் பன்னிரண்டுவயதுச்சிறுவன் மாடுமேய்த்து விட்டுத் திரும்பும்போது நாகபாம்பொன்று அவன் காலிலே கடித்தது. கடித்ததும் அவன் உடனே சற்றுத்தூரம் ஓடி அப்பாலே விழுந்தான் பாம்பு அவனைக் கலைத்துச் சென்று மறுபடி அவன் கையிலே கடிக்க அவன் சிலமணிநேரத்துள் இறந்தான். —ச-வே-பா-கா-ன்.

சட்டநிருபணசபை:—இந்த அக்டோபர்மீ 18உ இலங்கைச் சட்டநிருபணசபை மீளவும் ஒருமுறை கூடிற்று. உணவுப்பதார்த்தத்தை அதிகரிக்கப்பண்ணல், மதுபான விஷயம், உபாத்திமார் சம்பளவிஷயம் முதலியன கவனிக்கப்பட்டன. விசேஷ உணவுப்பதார்த்தமாகிய நெல்லை இலங்கையிலே தருதியான சட்டங்களால் அதிகமாய் விளைவிப்பது அவசியமென உணவுப்பதார்த்தச்செய்கை விஷயம் பேசி யோசிக்கப்பட்டது. மதுபானவிஷயத்தில் நிக்கப்பட்ட தவறணையுள்ள இடங்களில் மதுச்செய்வதற்கு மாற்றொடுத்தல் தவிர்க்கப்படவேண்டுமெனவும், அதிக வரிவிதிப்பதாற் பிறதேச மதுபானங்களின் வரவைக் குறைக்க வேண்டுமென்றுஞ் சில அங்கத்தவர் யோசனை கூறினர். உபாத்தியாயர் விஷயத்தில் உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளமும் பென்ஷனுங் கொடுத்தற்கு ஒழுங்குசெய்யப்பட வேண்டுமென்றும், அதற்குரிய ஒழுங்குகளைக் காண்பித்தற்கு ஓர்சபையை நியமிப்பதோடு சபையின் யோசனையை உடனே தழுவி நடக்க முயல வேண்டுமென்றும் பேச்சு நடக்கலாயிற்று.

முத்துக்குளிப்பு:—முத்துச்சிப்பிப் பரிசோதகரும், முத்துக்குளிப்பு சம்பந்தமான விஷயங்களை ஒழுங்குபண்ணும் பொறுப்புடையவருமான உத்தியோகஸ்தர் கொண்டச்சிக்குடாக் கடலில் மதிச்சிக்கட்டிக் கரையோரமாய் முத்துக்குளிப்பு நடத்தப் பக்குவங்கண்டிருக்கின்றனரென அறிகின்றோம். அவர் இப்பொழுது வெளிப்படுத்தியிருக்கும் அறிக்கைப்படி 1925ம் ஆண்டு மாசி பங்குனி மாதங்களிலே முத்துக்குளிப்பு நடத்தலாமென்று அரசினர் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இது ஓர் பாரிய முத்துக்குளிப்பாயிருக்கும். அடுத்த வருடம் அப்படிப்பட்ட முத்துக்குளிப்பு நடத்தலாம். இக்தக் கருமத்தை நடத்தும் முறையைப்பற்றித் தற்போதே அரசினர் யோசிக்கத் தொடங்கிவிட்டனர். கடைசியான முத்துக்குளிப்பு 1907-ம் ஆண்டு நடைபெற்றதாலின் இடைப்பட்ட நெடுங்காலத்தில் மறிச்சுக்கட்டிப்பகுதியிலிருந்த முத்துச்சலாபக் கட்டிடம் முதலிய அடுக்குகளெல்லாம் சீர்குலைந்தன. சில கிணறுகள் தூர்ந்தன. துறைமுக ஒழுங்குகள் புதுப்பிக்கப்படவேண்டும். காடுகள் திருத்தப்படவேண்டும். பழைய வள்ளங்கள் உபயோகிப்புக்கு தயாரதவைகளாயிருத்லின், புதிய தொன்று ஆயத்தஞ் செய்யவேண்டியதாயிருக்கின்றது. இவைகளுக்காகப் பெருந்தொகையான பணம் செலவழிக்க இடமிருக்கிறது அரசினர் கண்டு வரவு செலவுக்கணக்குத் திட்டம் பண்ணுஞ் சபைக்குத் தெரிவித்திருக்கின்றது. —உ-தா-கை

1922 ல் இலங்கையின் நிலை.

சுகாதாரம்.

குறிக்கப்பட்ட வருஷத்தில் இத்தீவின் சுகாதாரம் பொறுவே திருப்திகரமாகவே காணப்பட்டது. 1919, 1920-ம் ஆண்டுகளில் "இன்புளுவன்சா" என்ற காய்ச்சல் அதிகமாகக் காணப்பட்டது. சென்ற வருஷத்தில் அது மிகவுங் குறைவாய்க் காணப்பட்டது. 'பறங்கி' என்னும் நோய் இலங்கையின் காநுபக்கங்களிலுங் காணப்படுகின்றது. பல கிராமாந்திரங்களிலுள்ள குளங்கள் திருத்தப்பட்டதாலும், வைத்தியசாலைகள் திறக்கப்பட்டதாலும் இவ்வியாதி குறைந்துகொண்டே வருகின்றது. இந்நோய்க்குப் பிரத்தியேகமாக ஊசூராய்ச் சென்று வைத்தியஞ் செய்யும்பொருட்டு மூன்று டக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மலேரியாநோயும் சென்ற வருடம் குறைவாகவே காணப்பட்டது. 1921ல் 355 பேர் இந்நோயாற் பீடிக்கப்பட்டு 321 பேர் இறந்தனர். சென்ற வருஷம் 160 நோயும், 150 மரணமும். வைசூரி முன்வருஷத்திலும் அதிகமாகவே காணப்பட்டது. 337 பேர் இந்நோயால் வருந்தினார்கள். அதில் 43 பேர் இறந்தனர். யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலுமாய் 37 பேருக்கு இந்நோய் கண்டு 5 பேர் இறந்தனர்.

பைத்திய ஆஸ்பத்திரி.

இதில் சென்ற வருஷம் 1097 நோயாளிகள் இருந்தார்கள். கொழும்பிலிருந்து 66 மைல அகலமுள்ள அங்கோடா என்னுமிடத்தில் இதற்காக ஓர் புதுக் கட்டிடம் கட்டப்படுகின்றது. இது முடிந்தால் இதில் 1000 நோயாளிகளும், அவர்களுக்கவசியமான வைத்தியர், ஏவலாட்கள் முதலானவரீகளும் வசிக்கக்கூடியதாயிருக்கும். குஷ்ட ரோகிகட்காகக் கொழும்பிற்குச் சமீபமாயுள்ள ஹென்தலையில் ஒரு ஸ்தாபனமும், மட்டக்களப்பு மாந்தீவில் இன்னொன்றுமுண்டு. அவையில் முன்னதில் 455 நோயாளிகளும், மற்றதில் 116 நோயாளிகளும் சிகிற்சிக்கப்பட்டார்கள்.

சனத்தொகை.

1921-ம் ஆண்டு பங்குனிமீ லெடுத்த சனத்தொகைக் கணக்கின்படி கணக்கிட்டுப் பார்த்தால், 1922-ம் ஆண்டு மார்கழி 31-ந் திகதி இலங்கையின் சனத்தொகை 46 லட்சத்து 21 ஆயிரத்து 147 ஆகக் காணப்பட்டது. குறித்த வருஷத்தில் சனத்தொகையில் 81,868 கூடிற்று. இவ்விதங் கூடியதன் காரணம், இறப்பைவிடக் கூடுதலாக 53,036 பிறப்பும், இங்கிருந்து வெளியே சென்றவர்களின் தொகையிலும் வந்தவர்களின் தொகை 28,832 கூடுதலாக இருந்தபடியாலேயே. வெளியூர்களிலிருந்து இலங்கைக்கு 1,74,569 ஆட்கள் புதிதாக வந்தார்கள். இங்கிருந்து வெளியே சென்றவர்களின் தொகை 1,45,37.

சனத்தொகை வகுப்பாகப் பிரிக்கின் பின் வருமாறு காணப்படும்.

ஐரோப்பியர்	9,100
பறங்கியர்	30,250
சிங்களர்	30,87,308
தமிழர்	11,34,083
சோனகர்	2,88,644
மலாய்க்காரர்	13,721
மற்றவர்கள்	26,653

விவாகம்

மகமதியர்களை ஒழித்து மற்ற வகுப்பினர் கட்கிடையே 1922 ல் 24 306 விவாகங்கள் நடைபெற்றிருக்கின்றன. சென்ற வருஷத்திலும் 1206 விவாகங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றது. குறித்த காலத்தில் மகம்மதியர்கட்குள் 829 விவாகங்கள் நடந்திருக்கின்றன.

பிறப்பு

1,79,857 பிறப்புப் பதியப்பட்டிருக்கின்றது. இதில் 91,823 ஆண் குழந்தைகளும், 88,034 பெண் குழந்தைகளுங் காணப்பட்டன. சனத்தொகையுடன் கணக்கிட்டுப்பார்த்தால் ஆயிரஞ் சனங்களிடையே 30½ பிறப்பு உண்டாயிருக்கின்றது.

இறப்பு

சென்ற வருஷத்தில் 64,009 ஆண்களும், 62 812 பெண்களும் ஆக 1,26,821 ஆட்கள் இறந்தனர். ஆயிரத்தில் 28 வீதம் காணப்பட்டது.

சிசுமரணம்

ஒருவயதிற்குட்பட்ட 3,833 குழந்தைகள் இறந்தன. பிறந்த 1006 குழந்தைகளின் இக்கணக்கின்படி 188 குழந்தைகள் இறந்தன.

பொலிஸ்தற்றமுதலியவை

1922 மார்கழி 31 ந் திகதி பொலிஸ்பகுதியில் 30,442 உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். அவ்வருஷத்தில் இவர்களின் வேதனம் முதலான வைகட்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 27 லட்சத்து 46 ஆயிரத்து 750. இக்கணக்கின்படி இலங்கைவாசிகள் ஒவ்வொருவரும் இச்செலவுக்காக 61 சதம் கொடுத்திருக்கிறார்கள். கீழ்க்காட்டியபடி குற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

கொலை	202
கொலைக்கெத்தனித்தல்	58
படுகாயம்	718
அபாயகரமான ஆயுதங்களாற் காயப்படுத்தல்	1097
களவு	1682
நாற்கால் மிருகங்கள்களவு	810
மறுகுற்றங்கள்	2478
இவைகளில் ஆட்களுக்கெதிராக	2212
குற்றங்களும் பொருள்களுக்கெதிராக	4865
குற்றங்களும், அரசாங்கத்திற்கெதிராக	28

குற்றங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. வடமாகாணத்தின் பிரதானபட்டினமாகிய யாழ்ப்பாணத்தல்லாது வேறெங்கும் பொலிஸ் ஸ்தாபிக்கப்படவில்லை. குறித்தகாலத்தில் வடமாகாணத்திற் பின்வருமாறு குற்றங்கள் நடந்திருக்கின்றன.

கொலை 8; கொலைக்கெத்தனித்தல், படுகாயம் 61; அபாயகரமான ஆயுதங்களாற் காயப்படுத்தல் 91; களவு 39; ஆடுமாடு களவு 28; மறுகுற்றங்கள் 287; ஆக 509 குற்றங்கள். 39 விதம் முன்வருஷத்திலும் இவ்வருஷம் வடமாகாணத்திற் குற்றங்கள் கூடியிருக்கின்றன.

1915 ம் ஆண்டு களுத்துறை, டிஸ்திறிக் இரண்டாகப் பிரிக்கப்பட்டுக் களுத்துறையிலும், பாணந்துறையிலும் ஒவ்வொரு உதவிப் பொலிஸ் அதிபர் (Assistant Superintendant of Police) நியமிக்கப்பட்டார். இதன்பின் இவ்விடங்களிற் குற்றங்கள் அதிகமாகக் குறைந்துவிட்டன. சில வருஷங்களுக்குமுன் கேகாலையில் ஒரு பொலிஸ்ஸ்தானம் மட்டுமே இருந்தது. இன்று அங்கு 10 ஸ்தானங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தால் அங்கு குற்றங்கள் மிகவுங் குறைந்திருக்கின்றன.

கொழும்பை நீக்கியுள்ள பிற ஊர்களிற் பாரதூரமான குற்றங்கள் பின்வருமாறு நடந்திருக்கின்றன.

சம்புறுப்பிட்டியா	102
குருநாக்கல்	90
யாழ்ப்பாணம்	84
குளியப்பிட்டி	78
குற்றங்களை விசாரிக்கும்பொருட்டு	52

உதவி இன்ஸ்பெக்டர்கள், 3 சார்ஜர்கள், 42 கான்ஸ்றேபிள்மார்கள் அதிகமாகப் பொலிஸ் சேவையத்திற் சேர்க்கப்பட்டார்கள்.

உரும்பராயிற் பாரதூரமான குற்றங்க ளதிகப்பட்டதால் அங்கு தண்டனைப் பொலிஸ் (Punitive Police) ஸ்தானமொன்று 1922-ம் ஆண்டு ஆடி மாதம் 16ந் திகதி முதல் ஸ்தாபிக்கப்பட்டது.

வாலிபக் குற்றவாளிகள்.

வாலிபக் குற்றவாளிகள் பக்காத்திருடர்களாய் வாராது தடுப்பதற்கான வழிகளைத் தேடுவதவசியமா யிருக்கின்றது. குற்றவாளிகளின் சரித்திரங்களைப் பரிசோதித்துப் பார்க்கும் பொழுது பெரும்பாலும் அவர்கள் பெரும் பட்டணங்களிலேயே உண்டாகிறார்களெனக் காணப்படுகின்றது. வாலிபர்கள் 15 வயது தொடக்கம் சில்லறைக் களவுகள் செய்ய ஆரம்பித்துவிடுகின்றார்கள். உத்தமமான பொலிஸ் பகுதியின் உத்தேசம் ஒருவனைப் பக்காத்திருடனாகாது தடுப்பதேயாம். ஒருவன் கடினமான குற்றவாளியாய்விட்டால் அவனைத் திருத்திக் கொள்வது முடியாது. அவனுக்கு ஏதாவது உபயோகமான தொழில் கற்றுக் கொடுப்பதாலும் பிரயோசனமில்லை. ஏனெனில், மறியலிலிருந்து விடுபட்டவுடன் பழக்க வாசனையால் பின்னுங் குற்றஞ் செய்வதற்கே அவன் ஏவப்படுகின்றான்.

மறியல் விடுகள்.

1922 ல் 10,585 குற்றவாளிகள் மறியலுக்கனுப்பப்பட்டார்கள். இவர்களில் 49 குற்றவாளிகள் தூக்குவதற்கு விதிக்கப்பட்டவர்கள். மறியற்காரர்கள் மரவேலை, இரும்புவேலை, தகரவேலை, தோல்வேலை, தையல், பிரம்புச் சாமான்கள் செய்யுந் தொழில், கயிற்றுப் பாய், தும்புக்கட்டு, பாய் முதலிய தொழில்கள் பழக்கப்பட்டார்கள். அரசாங்க அச்சுக் கூடத்தில் 224 மறியற்காரர்கள் வேலைசெய்து வருகின்றார்கள். வைத்தியப் பகுதியிலும், புகையிரதப் பகுதியிலுமுள்ள அழுக்குத் துணிகளெல்லாம் மறியற்காரர்களாலேயே வெளுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் கரையூரில் நடந்து வரும் நிலந் திருத்தல்வேலை மிகவுந் திருப்தியாய் நடந்துவருகின்றது. இதிற் சராசரி தினந்தோறும் 118 மறியற்காரர்கள் வேலைசெய்துவருகின்றார்கள். திருத்தவேண்டிய நிலத்தின் அளவு 64½ ஏக்கர். இதில் 58½ ஏக்கர் முடித்தாய்விட்டது. வெளிக்கடை மறியல் ஸ்தானத்திற்கு அருகாமையில் 12 ஏக்கர் நிலத்திற் காய்கறிகள் தோட்டஞ் செய்யப்பட்டது. இதின் விளைவுப் பொருள்கள் 2564 ரூபா 48 சதத்துக்கு விற்றிருக்கின்றன. —உதயதாரகை.

கடிதம்.

ஐயா,

"ஸ்ரீலஸ்ரீ நாவலர் வாரிசகாலி" என்னுந் தலைப்பின்கீழ் புரட்டாதிமீ 25உ வெளிவந்த தமது பத்திரிகை வாயிலாக ஓர் கடிதர் எழுதினவற்றை வாசித்துப் பேரானந்தம் அடைந்தேன்.

ஈழமண்டலத்தில் இரண்டாம் அகத்தியராக வந்துதித்து தமிழகத்துக்கும் சைவத்துக்கு மாகத் தன்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையுந் தியாகஞ்செய்த இந் நாவலர் பெருமானின் ஞாபகசின்னத்திற்குத் தமிழர் ஒன்றுஞ் செய்திலரே; இதை எவ்விதஞ் செய்யலாம் என்று எண்ணியிருந்தாலே இக்கடிதருடைய காரியத்தில் ஓர் சங்கம் ஏற்படுத்துவதற்கு யோசித்திருப்பதாக அறிந்து சந்தோஷமடைந்தேன். அவர் யோசித்திருப்பவற்றைச் செய்வதுடன் அச்சங்கத்தின் பரிபாலனத்தின்கீழ் சைவப் பாடசாலைகளிலும் கோவில்களிலும் பிரசங்கஞ் செய்து சைவசமயத்தின் மகிமையைப் புலப்படுவதற்காக ஓர் சைவப்பிரசாரகரையும் தேவாரத் திருப்பாசுரங்களைப் பண்ணோடு ஓதப் பழக்குவதற்கு ஓர் ஓதுவாரையும் நியமித்து நடத்துவது எங்கள் நாவலருடைய ஞாபகசின்னத்துக்கு உவந்ததாயிருக்கு மென்பது எனியேனுடைய அபிப்பிராயம். இதைப் பற்றி வேறுஞ் சைவப்பெரியாருடன் பேசியுள்ளேன். இதில் முயற்சி செய்யும் அன்பர்களுக்கு எம்பெருமான் உதவிசெய்வாராக.

"வேதம் வலிகுன்றியது மேதகு சியாகமுதலிய வலிகுன்றின, வடற்குறன் மொழி முதலிய புராணம் வலிகுன்றியது, சொல்லிய சைவசமயப் போதம் வலிகுன்றியது, நம்நாதனினை ஞாலமிசை நாடரிய வாறுமுக காவலரடைந்த பொழுதே" என்று ஒரு அன்பர் இப்பெருமான் சிவபதமடைந்தபொழுது சொன்னவை உண்மையாயிற்று.

கொழும்பு, தமிழன்.
ஐப்பசித்திங்கள் ௧.

வைதிக சைவ பிராசீன பாடசாலை ஆவேதனம்.

வைதிக சைவ பிராசீன பாடசாலை எனப் பெயர் பெறும் இப்பாடசாலை சித்தார்த்திஸு ஆவணிமீ 4-ந் திகதிக்குச் சரியான 20-8-19ல் கன்னாகத்தில் ஒரு மாணவனோடு ஆரம்பமாயிற்று. பாடசாலைச் கட்டிடம் முடிவுபெறாமையினால் ஸ்ரீ மகாகணபதிக் குருக்களவர்கள் வீட்டுத் திண்ணையில் பாடசாலை வைத்து நடத்தப்பட்டுவந்தது. அடுத்த தைமீ 9-ந் திகதி அஸ்தாவது 1920-ஜனவரி 24-ல் இப்பாடசாலைப் பிரவேசம் நடைபெற்றது. அப்போதிருந்த பிள்ளைகள் தொகை இருபத்தொன்று. தமிழ்ப்பாடங்கள் கற்பித்தற்குத் தமிழ்ப் பண்டிதரும் நியமனஞ் செய்யப்பட்டார்.

1920ல் மாணவர் தொகை 51 ஆயிற்று.
1921ல் 46 ஆகக் குறைந்தது.
1922ல் 43 ஆயிற்று.
1923ல் இப்போது படிப்பவர் தொகை 45.

தமிழில் உயர்தர இலக்கண இலக்கியக் கல்வியும், ஸம்ஸ்கிருதத்திலும் காவியம் வியாகரணம் தர்க்கம் என்பவைகளும் பிராமணப் பிள்ளைகளுக்கு ஸௌகரிய நோக்கி வேதாத்தியனமும் கற்பிக்கப்பட்டுவந்தன.

கிரிய மந்திரங்களும், விதிவசனங்களும் ஸம்ஸ்கிருதத்திலுள்ளன. சமயசாத்திரங்கள் உயர்கடைத் தமிழிலுள்ளன. இவைகளைத் தாம் அறியவும் மற்றையோர்க்கு அறிவிக்கவும் வேண்டுபவர் முட்டற்ற பாஷாஞானமுடையராதல் அத்தியாவசியம். இதனை நோக்கி இப்பாடசாலையில் சேர்ந்து படிப்பவர் முதலில் பாஷைமுட்டின்றி வாசிப்பதை விளங்கிக்கொள்ளும் விற்பன்னர்களாக வேண்டுமென்பதே இங்கு கைக்கொள்ளப்படும் முறை. அஃதின்றி, சில கிரியைகளுக்குரிய மந்திரங்களை மாத்திரம் கிளிப்பிள்ளைப்பாடமாகச் சொல்லி வைத்து அரங்கேற்றிவிடுவது ஒரு வாற்றானுந் திருத்தம்பெறாது. இங்கு அப்படிச் செய்யாமையால் திருத்தியினமுற்றச் சில பெற்றார் தம் பிள்ளைகளை மறித்துக்கொண்டார்கள். தமிழ் ஸம்ஸ்கிருதங்களைப் படிக்க வேண்டும், செய்வதைத் திருத்தமாய்ச் செய்தல்வேண்டும், என்னுஞ் சிரத்தை ஆசாரியர் புரோகிதர் சிஷர் என்னுமிவருள் இல்லாமையால் அதிக பிள்ளைகள் வந்து சேர்ந்து படியாமல் இருக்கிறார்கள். வந்து சேர்ந்தவர்களும் படிப்பில் மிக்க அலட்சியங்கொண்டு பாடசாலைக்குக் கிரமமாய் வராமலிருப்பதால் இங்கு உபாத்தியாயரால் செய்யப்படும் வேலையும் முயற்சியும் தக்க பயன் உளியாது போகின்றன. பெற்றார் இனிமேலாகிலும் இவ்விஷயத்தில் சிரத்தைகொள்வார்களாக.

1921 - ல் அரசினர் தம் பரீக்ஷகர்களைக் கொண்டு பாடசாலையின் நிலைமையைப் பரிசோதித்துப் பார்த்துத் திருப்திகரமெனக்கண்டு வருடம் 400 ரூபா உதவிநன்கொடை தருவதாக வாக்களித்தனர். அப்படியே 21, 22, 23 ஆகிய மூன்று வருடங்களிலும் கொடுத்துவருகின்றனர். இத்தொகை ஒருவருடத்தில் செல்லுஞ் செலவின் அரைவாசிக்கும்போதாதே யெனப் பலபல முறை மானேஜர் அவர்கள் எழுதி விண்ணப்பித்தும் அரசினர் இதற்குமேல் கொடுக்க முடியாதெனக் கூறிவிட்டார்கள்.

1922 - ல் ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு, தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பரீக்ஷைகள் நடத்துவதற்கேற்ற ஏற்பாடுகள் செய்தது. அப்படியே சென்ற பங்குனிமீ நடைபெற்ற பரீக்ஷையில், பிரவேசத்திற்குத் தமிழில் ஐந்து பேர் போய் 2 பேர் சித்திபெற்றார் சம்ஸ்கிருதத்தில் நான்குபேர் போய் 4பேரும் சித்தி பெற்றார்கள்.

பாலபண்டிதபரீக்ஷையில் 5 பேர் போய் ஒருவர் தமிழ் சம்ஸ்கிருதம் என்னுமிரண்டிலும் சித்திபெற்றார். ஒருவர் தமிழிலும் இன்னொருவர் ஸம்ஸ்கிருதத்திலும் சித்தி பெற்றனர்.

இப்போது பண்டிதவகுப்பில் 2-உம் பாலபண்டிதவகுப்பில் 7 - உம் பிரவேசத்தில் 3 பேரும் படிக்கின்றார்கள். கீழ்வகுப்பிலும் பிள்ளைகள் வாசித்தல் இலக்கணம் கணக்கு என்பவைகள் படிக்கின்றார்கள்.

இப்பாடசாலை இன்னும் விருத்தி யடைந்து இதன் முழுநோக்கமும் சித்தி பெறுதிருத்தற்கு முக்கிய காரணம் ஒரு விடுதிச்சாலையில்லாமையாம். இக்குறைவினாலுள்ளதாகுந் தீமைகளோ பலவாம். ஆகையால் விடுதிச்சாலையொன்றமைத்தல் பாடசாலையபிமானிகள் கடமை. இப்பாடசாலை இந்நிலைக்கு வரத்தக்கதாக இயன்றளவு முயற்சித்து உதவிசெய்த உபாத்தியாயர்கள் அபிமானிகள் ஆகிய எல்லோருடைய நன்மையையும் பாராட்டி இன்னும் மேலும்மேலும் அவர்களினுதவி பெற்று இப்பாடசாலை மேலோங்கும் வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.

—கடிதம்.

வாலிபர்களின் கடமை

ஸ்ரீமான் கே' ஈசுவரதத்தர் 'சோஷல் ரிபார்மர்' பத்திரிகையில் பழக்க வழக்கங்களை மீறி நடக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி ஒரு வியாசமெழுதி யுள்ளார். அதில் அவர் பின்வரும் விஷயங்களை வற்புறுத்துகின்றார்:—

"நாம் ராஜீய விஷயங்களிலேயே ஈடுபட்டிருப்பதால் சமூக ஆசாரசம்பந்தமாக உள்ள கொடுமைகளையும் அநீதிகளையும் கவனிப்பதில்லை. நாம் ராஜீய விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும், சமூக ஆசார விஷயங்களிலும் சுதந்தரம் பெறுவதற்காகவே போராடி வருகின்றோம். வாலிபர்களே இந்தப் புரட்சிக் காலத்தில் ஏற்படும் கஷ்டங்களை எல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் அவர்களிடம் தான் அதனைச் செய்யக்கூடிய போதிய ஊக்கமும் சக்தியும் இருக்கின்றன. அவர்கள்தான் நல்ல குடும்பங்களைக் கஷ்டத்திற்குள்ளாத்திய பாவிகளாக இருக்கின்றனர். வரதக்ஷணை வாங்குவது தனது மனச்சாட்சிக்கு விரோதமன்று தோன்றும் வாலிபன் தனது பெற்றோர்கள் அதை வாங்குவதில் பிடிவாதமாகஇருந்தால்அவர்களை மீறிக்கடக்கலாம். படித்த வாலிபர்கள் கலியாண சாலத்தில் ஆடுமாடுகளைப் போன்று ஓர் விற்பனைப் பொருளாகும்படி செய்யப்படுவது எவ்வளவு கேவலமாக இருக்கிறது. அன்பு, அந்தஸ்து கல்வி இவற்றிற்காகக் கல்யாணங்கள் நடைபெறாமல் கேவலம் பணத்திற்காக நடப்பதென்றால் அம்மாதிரியான வழக்கத்தை அனுஷ்டிக்கும் ஜாதிக்கும் வாலிபர்களது கல்விக்கும் அது எவ்வளவு அவமானமாக முடியும். வாலிபர்கள் இந்தக் கொடிய வழக்கத்தை மீறி நடக்கவேண்டும். வாலிபர்கள் சிறுமிகளைக் கல்யாணஞ் செய்து கொள்ளப்படாது. பெற்றோர்கள் சிறுமிகளைக் கல்யாணஞ் செய்து கொடுக்கக் கூடாது. சிறுமிகள் பெரியவர்களாகும் பொழுது அவர்களது திறமைகளும் புத்தியும் அபிவிருத்தியாவதால் அவர்களுக்கு சுயம்வர உரிமை அளிக்க வேண்டிய தவசியம். அவர்களைச் சிறியோர்களாக இருக்கும் பொழுதே பெற்றோர்கள் விவாகஞ் செய்து கொடுத்தால் இந்திய வாலிபர்களும் அதற்குச் சம்மதித்து தங்களது குடும்பங்களை அதிக துக்கரமானதாக்க வேண்டுமா? தங்களுடையவும், தங்களது குடும்பம் தேசம் இவற்றினுடையவும் நலத்தைக் கோருகின்றவர்களாக இருந்தால் ஆசார சம்பந்தமாக ஏற்பட்டுள்ள கெடுதிகளை நீக்க முயலவேண்டும். அவர்கள் எல்லாத் தடைகளையும் நீங்கி சகல விதங்களிலும் இந்திய சுதந்தரமடையும்படி முயல வேண்டும். —சுதேசமித்திரன்.

விளம்பரம்.

யாழ்ப்பாணம் ரேகில் இருக்கும் விறகுகாலையில் கீழேகுறிக்கப் பட்ட மரங்கள் வருற கார்த்திகைமாசம் முதலாந்திகதி வியாழக்கிழமை முற்பகல் ஒன்பது (9) மணி தொடக்கமும் இரண்டாந்திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் ஒன்பது (9) மணி தொடக்கமும் 9 பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் காட்டேசண்டுத்துரை யவர்களால் விற்கப்படும்.

முதலாந்திகதி விற்கப்படும் மரங்கள்.
(1) 75 பாலை.
(2) 20 டன் முதிரைக் கொப்புகள்.
(3) 4 சமண்டலை.

இரண்டாந்திகதி விற்கபடும் மரங்கள்.
(1) 50 பாலை
(2) 33 முதிரை.
(3) 6 யாவரனை.
(4) 1 காட்டாமணக்கு.

கண்டி
காட்டுக் கங்தோர்,
ஐப்பசி 16, 1923.
G. 337.)

J. D. Sargent,
வனபரிபாலனர்.

ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகமி மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாராம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிகமதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
காரியதரிசி.

(Q 42)

விளம்பரம்.

"சாவகச்சேரிச் சந்தைக்குள் இருக்கும் நாலு கிட்டங்கி அறைகளடங்கிய நாலுபரப்பு நிலமும், அச்சந்தையிலிருந்து இரண்டு மைலுக் கப்பால் தனங்களப்பிலிருக்கும் காசிப்பிள்ளை கட்டென்று சொல்லப்படும் 100 பரப்பு வயலும், சாவகச்சேரி சந்தத்தானை இங்கிலீசுப் பள்ளிக்கூடத்துக்குள் கிட்ட ஒரு ஒழுங்கையிலிருக்கும் ஐம்பது பரப்படங்கிய தென்னமரங்களுள்ள ஒரு காணியும் இங்கிலீசுக்கு 1923ம் ஆண்டு கார்த்திகைமீ முதலாந்திகதி வியாழக்கிழமை பின்னேரம் 4மணிக்கு சாவகச்சேரிச் சந்தைக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் கூறி விற்கப்படும். தேவையானால் இக்காணிகளைப் பிரித்துத் துண்டுகளாகவும் வாங்கிக் கொள்ளலாம். சொல்லப்பட்ட திகதிக்கு முந்தியும் விலை திருத்தமானால் என்னைக் கண்டு ஒழுங்குபண்ணி வாங்கிக்கொள்ளலாம்.

செ. சி. குமாரசாமி,
விரிந்தாவனம்,
கொடிகாமம்.

(Mis. 339).

விளம்பரம்.

இத்தாற் சகலரும் அறியவேண்டியது 1924ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதி தொடக்கம் மார்கழிமாதம் 31-ந் திகதி முடிய பெரியகடை, அதின் அருகிலிருக்கும் கால, கறிக்கடை, பண்ணைத்துறையில் மீன் விற்குமிடம், சின்னக்கடை, கைக்குளச்சந்தை, முத்திரைச் சந்தை, தட்டாரதெருச்சந்தை இவைகளின் வருஷாந்தக் குத்தகைகள் 1923-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 29-ந் திகதி திங்கட்கிழமை காலை 11 மணி தொடக்கம் கச்சேரி விற்பனவு வளாகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

குத்தகைகளைப்பற்றிய கொற்றீகைகள் இந்தக் கச்சேரியிலும், கச்சேரியிலும், கோட்டு விடுகளிலும் மேற்குறித்த சந்தைகளிலும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

குத்தகையைப்பற்றிய வேறு விஷயங்களை நகர சங்க சக்கிடித்தாரிட மிருந்து அறிந்து கொள்ளலாம்.

S. E. R. Solomon,
நகர சங்க சக்கிடித்தார்.

(G 339).

தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீழம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலக் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(H. 16.)

"பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இனபக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னங்கத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இனபத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3 மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

மூலத்திற்கு குருதாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமூளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவுநாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4

பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

மாத்திரிக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதனை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள் மெடல்கள் பெற்ற

C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி. S. I.

(H. 19).

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றாவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லாதபடி இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு; பெருவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுஸ்டீ, நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சாப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனநுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியபட்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியபட்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்சிலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிரதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ் ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷெயூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் இருதம் அதாவது ஷெகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனாலும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியமான குணமுண்டென்றாவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address:
Khader Brothers
Porto-Novo.

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.

(Y. 19).

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.